Ti Nb Ir Ta Ru Pt

Ti Anode Fabricators Pvt. Ltd.

Tiaano® 23 YEARS Since 1992
Innovation In Inert Metals

# 48 Noothanchary, Madambakkam, Chennai – 126, India. Ph: +91 44 2278 1148 Fax: 22781362 Mob: +91 94445 69900 Email: marketing@tianode.com Web: www.tianode.com

“கண்டம் விட்டு கண்டம் தாண்டி நாளை அண்டம் ஆளும் இந்தியா”

## GOAL 2015-2016

- **Endeavor** : QUALITY
- **Turnover Target** : 156% ↑
- **Products for ...**
  - Consumer Market : 3%
  - Green Environment : 25%
- **Rejection Rate** :100% ↓

## TESTIMONIALS

- **Customers...**
  - Up to Feb. 16 : 930 Nos.
  - Up to Jan. 16 : 924 Nos.
- **Performance Feb. 16 ...**
  - Turnover growth : 8.61%
  - Employment growth : 0%
  - 100% Attendance : 10.91 %

## MANAGEMENT

- **Managing Director**
  - Mr. V. P. Jeyakumar
- **Board of Directors**
  - Ms. P.E. Nancy
  - Mrs. J. Vanajambika

## OUR FORMULATIONS

Tiaano – Electro Chemical & Exotic Metal Equipments

Aquafil – Water Treatment Equipments.

Fib Tec Composite – FRP/ GRP Equipments.

HydroGen – HHO Generators

Titanictrade – Portal for Exotic Metals

– Tiaano Vidyashrm (CBSE Curriculam)




## திட்டமிடு!!

தேனீக்களின் வாழ்க்கையை ஆராய்ந்தால் தேனீக்களின் ஒவ்வொரு செயலும் நமக்கு அழகான செய்திகளைச் சொல்வதைப் புரிந்து கொள்ளலாம். தேன் நிறைந்த மலர்களைத் தேடி தேனீக்கள் வெகுதொலைவு பறந்து செல்கின்றன. ஒரு பவுண்டு தேனுக்காக இருபது லட்சம் மலர்களில் அமர்ந்து சாற்றை உறிஞ்ச வேண்டும். இதற்காக 50,000 மைல்கள் பறந்தாக வேண்டும், இப்படிச் சேகரிக்கப்படும் ‘மலர்ச்சாறு’ முழுவதும் தேன் ஆகிவிடுகிறதா என்றால் அதுதான் இல்லை. போதிய அளவு மலர்ச்சாறு சேர்ந்ததும் அதனைத் தேனாக மாற்றும் பணியில் தேனீக்கள் சுறுசுறுப்பாக செயல்படுகின்றன.

இதனால் மலர்ச்சாற்றில் உள்ள அதிகப்படியான தண்ணீர் ஆவியாகி விடுகிறது. இப்பொழுது சுத்தமான தேன் ரெடி, இதனை தேனீக்கள் மீண்டும் உறிஞ்சி எடுத்துக்கொண்டு தங்கள் கூடுகளில் உள்ள துளைகள் போன்ற சிறுசிறு அறைகளில் சேமித்து வைக்கின்றன. பிறகு தூசி, துரும்புகள் விழுந்திடா வண்ணம் அந்தத் துளைகளையும் மூடிவிடுகின்றன. இப்படி இயற்கையான முறையில் பாதுகாக்கப்பட்ட தூய்மையான தேனை மனிதன் எளிதாகப் பெற்றுக்கொள்கிறான்!

இறைவன் நினைத்திருந்தால் எடுத்த எடுப்பிலேயே தேனைப் படைத்திருக்க முடியும்; அல்லது ஒவ்வொரு ஊரிலும் சிறுசிறு தேனாறுகளை ஓடவைத்திருக்க முடியும். அதற்குரிய வலிமை இருந்தும் இறைவன் அப்படிச் செய்யவில்லை. தன்னுடைய மிக உயர்ந்த படைப்பான மனிதன், தேனைச் சுவைப்பதோடு நின்றுவிடாமல், அந்தத் தேனீக்களிடமிருந்து படிப்பினையையும் பெறவேண்டும் என்பதும் இறைவனின் நோக்கமாக இருக்கலாம்.

தேனீக்கள் செயல்பாட்டை இரண்டே வார்த்தைகளில் இப்படி வர்ணிக்கலாம்: ‘திட்டமிட்டசெயல், ‘இதுதான் தேனீக்களுக்கு இறைவன் அமைத்துத் தந்த சீரான பாதை. மனிதனுக்கும் ஒரு நேரான பாதையை இறைவன் அருளியுள்ளான். ஆனால் அந்தத் தேனீக்களுக்கு இருக்கும் விவேகமும், கீழ்ப்படிதலும் நம்மை பிரமிக்க வைக்கிறது அல்லவா?

எந்தவொரு தலைவனும் இல்லாமல் தேனீக்கள் எப்படி தன் பணியை திட்டமிட்டு செயல்படுத்துகிறது. அதுபோலவே நாமும் நம்முடைய வாழ்க்கையில் செயல்படுத்துகிற காரியம், படிப்போ, வேலையோ அல்லது வியாபாரமோ எதுவாகயிருப்பினும் “திட்டமிட்டு” செயல்படுத்தும் போது நிச்சயமாக வெற்றி பெறுவீர்கள்!

*Compiled By : Ms. P. E. Nancy*
*Director - Admin*

### Never Forget Two People in your Life

The person who ***lost*** everything just to make you **win**
*[your Father]*

The person who **pain** everything just to make you **happy**
*[your Mother]*

## FUNCTIONAL WISHES




Tamil New Year
14th April

**Best Wishes from Tiaano Employees**

## EXTERNAL SUPPORT

| | |
|---|---|
| Banking | : M/s. UCO Bank |
| Auditing | : M/s. Nisar & Kumar |
| AQ Auditing | : M/s. Juran Quality |
| Legal Advisers | : Lr. M.K. Govindan |
| | : Lr. V. Benedict Vincent |
| Tech. Consultant: | Dr.G.S. Viswanath |
| Central Excise | : Mr. R. Raghavan |
| Health Care | : M/s. Bethesda Hospital<br>Tel: 22294565 |
| ESI Corporation | : Tambaram Dispensary<br>Tel: 044 2226 0194 |

## BIRTH DAY WISHES

எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே!
அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே!

**Mr. G. Manivannan** — **01st Apr.**
Coating

**Mr. G. S. Mohana Kumar** — **01st Apr.**
Production

**Mr. T. Raveendran** — **04th Apr.**
Marketing



**Miss. T. Regi** — **04th Apr.**
Facilitation

**Mr. G. Janarthanan** — **05th Apr.**
Fibtec

**Mr. M. Pullan** — **07th Apr.**
Production

**Mr. A. Neduchizhian** — **07th Apr.**
Production

**Mr. T. Ramesh** — **08th Apr.**
Marketing

**Mr. K. Murugan** — **08th Apr.**
Production

**Mr. A. Pasupathi** — **15th Apr.**
Fibtec

**Mr. N. Muruganantham** — **20th Apr.**
Fibtec

**Mrs. A. Nirmala** — **22nd Apr.**
Finance

**Mr. N. Shanmugam** — **30th Apr.**
Project

**Best Wishes from Tiaano Employees**

## Sweetness of Sour Oranges

A man went to market with his wife. He often bought oranges from an old lady. After they were weighed, paid for and put in his bag, he would always pick one from his bag, peel it, put a segment in his mouth, complain it's sour and pass on the orange to the seller.

The old lady would put one segment in her mouth and retort, "why, it's sweet," but by then he was gone with his bag. His wife, always with him, asked, "the oranges are always sweet, then why this drama every time?"

He smiled, "the old mother sells sweet oranges but never eats them herself. This way I get her to eat one, without losing her money. That's all."

The vegetable seller next to the old lady, saw this everyday. She chided, "every time this man fusses over your oranges, and I see that you always weigh a few extra for him. Why?" The old lady smiled, "I know he does this to feed me an orange, only, he thinks I don't understand. I never weigh extra. His love tilts the scale slightly every time."

Life's joys are in these sweet little gestures of love and respect for our fellow beings.

*Compiled By : Mr. C. Abilash*
*Marketing*

## பிளாஸ்டிக் அழிக்கப்பட வேண்டும்

சென்னை பெருவெள்ள பாதிப்புக்கு நீர் நிலைகள் ஆக்கிரமிப்பு மட்டுமல்லாமல் பிளாஸ்டிக் பைகள் பயன்படுத்தி குப்பையாக சேர்ந்ததும் ஒரு காரணம். மழைத் தண்ணீரை வடியவிடாமல் கால்வாய்களில் குப்பை குப்பையாக பிளாஸ்டிக் பைகளும் அடைத்துக்கொண்டதும்தான் காரணம். இதுவரை லட்சக்கணக்கான பிளாஸ்டிக் குப்பைகள் அகற்றப்பட்டுள்ளன. பிளாஸ்டிக் பைகள் சுற்றுச்சூழலை மட்டும் பாதிக்காமல் உடல் நலத்திற்கும் கேடு. பிளாஸ்டிக் மண்ணில் மக்குவதில்லை, தண்ணீரையும் மண்ணில் சேர்க்கவிடாமல் தடுத்துவிடுகின்றன. குப்பைகளாக குவிகின்ற பிளாஸ்டிக் பைகள் மக்காமல் குப்பைகளாக சேர்ந்து மண்ணின் மேல் அப்படியே உள்ளதால் மழைநீர் தரைக்கு கீழே இறங்குவதில்லை.

இப்போது உணவு விடுதியில்கூட காபி, பால், சாதம், சாம்பார், குருமா பிளாஸ்டிக் பைகளிலும், பிளாஸ்டிக் டப்பாக்களிலும் சூடாக கட்டித் தருகின்றனர். பிளாஸ்டிக்கை எரித்தாலோ, சூடாக்கினாலோ, டை — ஆக்சிஜன் என்ற தீய வாயு வெளிவருகின்றது. பிளாஸ்டிக் கட்டப்பட்ட உணவு வகைகளை சாப்பிட்டால் இந்த டை — ஆக்சிஜன் உடம்பில் சேர்ந்து பல நோய்களை உருவாக்குகின்றன. இதனால் புற்றுநோய், சர்க்கரை நோய், இதய நோய்களும் வருகின்றன. இப்படி பிளாஸ்டிக் அரக்கனை நடைமுறையில் கட்டிக்கொண்டு துன்பங்களை விலைக்கு வாங்குகின்றோமோ என்ற விழிப்புணர்வு கூட வரவில்லையே என்பதுதான் நமது ஆதங்கம். ஒரு காலத்தில் பொருட்களை துணிப்பையில் அல்லது காகித பையில் வாங்குவதுண்டு. மூக்குப் பொடி, புகையிலை போன்ற பொருட்கள் கூட வாழை மட்டையில் கட்டி விற்பது உண்டு. இந்த முறை அறவே இப்போது இல்லாமல் போய்விட்டது.

## தெரிந்து கொள்வோம்

### Health Benefits of Basil (Thulasi)

- Sharpen memory
- Combating colds, flu and the herpes.
- Eliminate infections
- Antibacterial properties
- Remove phlegm from your bronchial tubes
- Relieve mucus in asthma
- Treating the bites of insects and leeches
- Anti-stress agent

### Good Reasons to Eat Watermelon this Summer

- Helps in water balance in the body and can help alleviate muscle cramps as well as regulate blood pressure.
- It contains Beta carotene which helps in vision and eye related problems as well as fighting various cold and infections.
- Help with healthy flow of blood which can reduce the chance of certain cardiovascular problems.
- It also reduces water retention, balance hormones and strengthens your immune system.
- 90% water with the remaining less than 10% being sugar.

### நம்மை உயர்த்தும் 7 விசயங்கள்

1. ஏழ்மையிலும் நேர்மை
2. கோபத்திலும் பொறுமை
3. தோல்வியிலும் விடாமுயற்சி
4. வறுமையிலும் உதவி செய்யும் மனம்
5. துன்பத்திலும் துணிவு
6. செல்வத்திலும் எளிமை
7. பதவியிலும் பணிவு

*Collected from Internet*

Starting together is *Business*

Keeping together is *Work in Progress*

Working together is *Success*

*Compiled By : Mr. M. Shahul Hameed*
*Marketing*

இப்படியாக எல்லா வகையிலும் மானிடத்திற்கு அபாயகரமாக உள்ள பிளாஸ்டிக்கை தடை செய்ய வேண்டாமா? இதற்கும் தடை செய்யாமல் சில ஆதிக்க சக்திகளும் தங்கள் வியாபாரத்தை பெருக்கிக் கொள்ள நாட்டில் நடமாடுகிறார்கள்.

இனிமேலாவது பிளாஸ்டிக் பயன்பாட்டை நிறுத்துவோம். பிளாஸ்டிக்கை அகற்றுவோம் என்ற உறுதிமொழி எடுப்போம். நாட்டின் நலன் கருதி இந்த பிரச்சனையில் தீர்க்கமான முடிவை எடுக்க வேண்டும் என்பதுதான் காலத்தின் கட்டாயம்.

*Compiled By : Mr. V. Azhakesan*
*Marketing*

### உலகம் வெப்பமயமாவதால் முதலில் பாதிக்கப்படுவது இந்தியாதான்!

உலகம் வெப்பமயமாவதால் அடுத்த சில ஆண்டுகளில் இந்தியாவின் பெரும்பாலான பகுதிகளில் கடுமையான உணவு பஞ்சமும், வறட்சியும் ஏற்படும் என்று உலக வங்கி எச்சரித்துள்ளது. இது குறித்து உலக வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில், அடுத்த 30 ஆண்டுகளில், உலகத்தின் வெப்பநிலை 2 டிகிரி செல்சியஸ் உயரும். இதனால், இலட்சக்கணக்கான மக்கள் வறுமையில் சிக்குவார்கள்.

ஆப்பிரிக்காவில், சகாரா பாலைவனத்தைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் உணவு பற்றாக்குறை ஏற்படும். மேலும், தெற்கு ஆசியாவில், மழை பெய்யும் முறை மாறி வருகிறது. இதனால், சில பகுதிகள் நீரில் மூழ்கும் நிலையும், சில பகுதிகளில் மின்சார உற்பத்திக்கும், விவசாயத்திற்கும் தண்ணீர் இன்றி திண்டாடும் நிலையம் ஏற்படும்.

மும்பை, கொல்கத்தாவில் கடல் மட்டம் உயர்வதை நன்கு உணர முடியும். மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளில் கடும் பஞ்சம் ஏற்பட்டு வனங்கள் பாதிக்கப்படும். தட்பவெட்ப நிலை மாறுவதால், தென் கிழக்கு ஆசியாவில் மீன் வளம் குறையும். இதனால், கடலோரத்தில் மக்கள் வசிப்பது குறையும். சூறாவளிகள் ஏற்பட்டு, நகரங்களில் கடும் சேதத்தை ஏற்படுத்தும். போதுமான நடவடிக்கைகள் எடுக்காமல் இருந்தால், தொழிற்சாலைகள் அதிகம் தோன்றாத காலத்தில் இருந்ததைவிட 4 டிகிரி கூடுதல் வெப்பநிலை இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் நிலவும்.

*Compiled By : Mr. K. Manivannan*
*Marketing*

### நம்பித்தான் ஆகவேண்டும்
### 5S (தொடர்ச்சி LI)

**ஜாக்கிரதை**

ஆகவே, முக்கியமான எந்த வேலையையும் அவன் கையில் ஒப்படைப்பதில்லை என்று அவர்களுக்குள் தீர்மானித்துக் கொள்கிறார்கள்.

அப்போது ஒரு நாள், தனக்கு வேதியியல் பாடத்தில் ஏதோ சந்தேகம் என்று ஆசிரியரிடம் சொல்கிற ஆர்ச்சி, அன்று மாலை வகுப்புகள் முடிந்தபிறகு, சில பரிசோதனைகளைத் தானே செய்து பாக்க விரும்புவதாகச் சொல்லி அனுமதி கேட்கிறான்.

அவ்வளவுதான். ஆர்ச்சியின் வேதியியல் ஆசிரியருக்கு உடம்பெல்லாம் வியர்வை பொங்கத் தொடங்கிவிடுகிறது. புதற்றத்துடன் தலைமை ஆசிரியரின் அறைக்கு ஓடி, விஷயத்தைச் சொல்கிறார். இதைக் கேட்டதும், ‘அய்யய்யோ, ஆபத்து!’ என்று அலறுகிறார் தலைமை ஆசிரியர்.

## கவிதைகள்

### புகழ்ச்சி

நண்பனை அவன் இல்லாத போது மனமாரப் புகழ வேண்டும்.
நல்வழி காட்டிய ஆசிரியரை எந்த இடத்திலும் புகழ வேண்டும்.
மைந்தர்களை நெஞ்சுக்குள் புகழ வேண்டும்.
வேலையாட்களை வேலை முடிந்ததும் புகழ வேண்டும்.

### கதிரவன்

உறக்கம் மறந்த
உழைப்பாளி இவன் ஒருவனே,

சோம்பலில் சலித்துக் கொண்ட தாய்
சரித்திரம் இல்லை,
மனிதா...புரிந்ததா?
உறக்கம் மறந்து
சுட்டெரிக்கப் பிறந்தவன்தான்
உலகை ஆள்கிறான்,

நீயும் உலகை ஆள
சுட்டெரிக்கப் பழகு
உன்னை ஆளும்

உருப்படாத அசுத்தங்களை...

### Keeps You...

Happiness keeps you sweet.
Trials keep you strong,
Sorrows keep you human,
Failures keep you humble,
Success keeps you glowing,
Friends and family keep you going...

*Compiled By : Ms. T. Regi*
*Facilitation*

## சிந்தனைக்கு

உலகம் நமக்கு எப்படித் தோன்றுகிறது என்பது நமது மனப்பான்மையைப் பொறுத்தது. நமது எண்ணங்களே பொருள்களை அழகானவை ஆக்குகின்றன. அவற்றை விகாரமானவை ஆக்குவதும் நம் எண்ணங்களே. உலகம் முழுவதும் நம் மனதில்தான் இருக்கிறது. எதையும் சரியான முறையில் பார்க்கக் கற்றுக் கொள்ளுங்கள். முதலில் இந்த உலகை நம்புங்கள் — உலகிலுள்ள ஒவ்வொன்றுக்கும் ஓர் அர்த்தம் உள்ளது என்பதை நம்புங்கள்.

*Compiled By : Mrs. R. Jayanthi*
*Marketing*

**பணியாளர்கள் மற்றும் பணியாளர்களின் குடும்பத்தாரிடமிருந்து கவிதைகள், கட்டுரைகள், கதைகள் வரவேற்கப்படுகிறது.**
**– Editor**

இத்தனை கலாட்டாவுக்கும் காரணம், ஆபத்து வரவழைப்பதில் ஆர்ச்சிக்கு இருக்கிற அபாரத் திறமைதான். சாதாரணமாக ஒரு புத்தகத்தைத் தூக்கி அந்த மேஜை மேல் வை என்று சொன்னாலே, யாருடைய காலையாவது உடைத்து விடுவான் அவன். அப்படிப்பட்ட ஆர்ச்சியை, வேதியியல் பரிசோதனைச்சாலைக்குள், அதுவும் தனியாக அனுமதித்தால் என்ன விபரீதம் நடக்குமோ!

'நிச்சயமாக அவன் ஏதேனும் தவறாகச் செய்து, இந்தப் பள்ளியையே வெடித்துச் சிதறடித்து விடுவான்!' என்று பதற்றத்தோடு தலைமை ஆசிரியர், சொல்கிறார் 'இப்போது நாம் என்ன செய்வது?'

'எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது!' என்கிறார் வேதியியல் ஆசிரியர். 'நம்முடைய பரிசோதனைச்சாலையில், வெடிக்கக்கூடிய பொருள்கள் என்னென்ன என்று எனக்கு நன்றாகத் தெரியும். அதையெல்லாம் உடனடியாக அகற்றிவிடுகிறேன். அதன்பிறகு ஆர்ச்சியால் எதுவும் தவறாகச் செய்யமுடியாது. நம்முடைய பள்ளிக்கு ஆபத்து இல்லை!

'அப்பாடா!' என்று நிம்மதிப் பெருமூச்சுடன் இருக்கையில் சரிகிறார் தலைமை ஆசிரியர். 'முதல் வேலையாக அதைச் செய்யுங்கள். ஆர்ச்சியின் கையில் விபரீதமாக எதுவும் சிக்கிவிடாதபடி பார்த்துக்கொள்ளுங்கள்!'

திட்டமிட்டபடி, அந்த வேதியியல் பரிசோதனைச்சாலையில் இருக்கிற பொருள்களில், வெடிக்கக்கூடிய தன்மை கொண்டவை அனைத்தையும் ஒவ்வொன்றாகச் சேகரிக்கிறார் வேதியியல் ஆசிரியர். எல்லாவற்றையும் தலைமை ஆசிரியர் அறைக்குக் கொண்டு சென்று, ஓர் அலமாரியில் பத்திரமாக வைத்துவிடுகிறார்.

இந்த விஷயத்தை அவர் தலைமை ஆசிரியரிடம் சொன்னதும், அவருக்கு மிகுந்த சந்தோஷம். நல்ல வேலை செய்தீர்கள்! என்று வேதியியல் ஆசிரியரைப் பாராட்டிவிட்டு, அவர் சொன்ன அலமாரியின் கதவைப் பிடித்து இழுக்கிறார்.

தொடரும்...

### Titanium Anolyte Tank

